நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி: 6

தொகுதி: 112

திருவள்ளுவர் ஆண்டு 2049

விலை: ரூ.20

ஜூன் - 2018




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

# செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி. இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் து.மாயராசன் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் சு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறியாளர் லெ.சிவக்குமார் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |
| முனைவர். க.சந்திரசேகரன் பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். சு.விஜயன் முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். கி.வேணுகா துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். பா.நேருஜி உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. **இதழ் மணம்** 4

2. **சிலப்பதிகாரப் புதையல்கள் - சிலம்பின் அடையும் நடையும்** 6
   - முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

3. **குயில் பாட்டில் மெய்ப்பாடு** 9
   - பேராசிரியர் **செ.வை.சண்முகம்**
   சென்ற இதழின் தொடர்ச்சி

4. **தமிழர் கண்ட முழுமுதற் கடவுள்** 16
   - பேராசிரியர் **ப.மருதநாயகம்**
   சென்ற இதழின் தொடர்ச்சி

5. **இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை** 29
   - பேராசிரியர் **இரா.கோதண்டராமன்**
   சென்ற இதழின் தொடர்ச்சி

6. **தமிழ்ப் பண்பாட்டு நோக்கில் கட்டைக்கூத்து** 36
   - **க.சேகர்**



வலைத்தளம்

www.maduraitamilsangam.com

www.senthamilcollege.com

*மின்னஞ்சல்*

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com

maduraitamilsangam@yahoo.co.in

principalsenthamilcollege@yahoo.co.in


| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 3,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 20 | |

# இதழ் மணம்

தமிழறிஞர் இரா.இளங்குமரனார், "சிலம்பின் அடையும் நடையும்" என்னும் தலைப்பில் சிலம்பு என்னும் சொல் எடுத்துரைக்கப்பட்டுள்ள நுட்பத்தை ஆய்ந்துரைப்பது கற்பவர்களுக்கு வியப்பை அளிக்கும். சிலம்பு வந்துள்ள இடங்களையும் சிலம்புக்கு ஆசிரியர் இளங்கோவடிகள் தந்துள்ள அடைமொழி பொருள் பொதிந்து எடுத்தாளப்பட்டிருப்பதையும் ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் கற்று இன்புறத்தக்கது. செஞ்சிலம்பு காப்பியத்தின் மூலக்கருவாக அமைந்து உண்மை உணர்த்துவதால் அது செஞ்சிலம்பு என நூலாசிரியர் இளங்கோ அடிகளால் போற்றப்படும் செய்தி நுண்ணிதின் உணர்தற்குரியது. பலருடைய ஐயத்திற்கும் விடையாக அமைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

"குயில் பாட்டில் மெய்ப்பாடு" என்னும் கட்டுரைத்தொடர் இவ்விதழில் தொடர்கிறது. பேராசிரியர் செ.வை.சண்முகம் அவர்கள் குயில், குரங்கு, மாடு, மனிதன் எனக் காதல் கதையில் மெய்ப்பாடு. தொல்காப்பிய இலக்கணத்திற்குப் பொருந்தி வருவதை எடுத்துக்காட்டும் செய்தி சுவைபட அமைந்துள்ளது. பாரதியின் கவிதையில் சொற்களின் கோவை இன்பம் தரும்; கவிதை வேகத்தில் சொல் இன்பத்தில் மூழ்கி மெய்ப்பாட்டுணர்வை மறந்துவிடாமல் கற்று இன்புறும் வகையில் பாரதியின் உணர்வை நாமும் பெற வேண்டும் என்னும் பேராசிரியர் செ.வை.சண்முகத்தின் முயற்சி வாசகர்கள் நினைவில் நிறுத்த வேண்டிய அரிய செய்தியாகும்.

பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களின் "தமிழர் கண்ட முழுமுதற் கடவுள்" என்னும் கட்டுரை உணர்த்தும் பொருள் கடவுளைப் பற்றிய அறிவின் பரப்பைச் சிந்திப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். கடவுளைப் "பெரிய மௌனத்தின் வைப்பு" "அருளாகி நின்றவர்கள் அறிவது" "கருதரிய ஆனந்தமழை" என்று தாயுமானவர் பாடல் வழியாக கடவுளை ஆசிரியர் உணர்த்த முயலும் முயற்சி கடவுளைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு அரியசெய்தி. வழிவழியாகத் தமிழ்ச்சான்றோர் பலரும் கடவுள் குறித்து உணர்த்திய செய்திகளை ஆசிரியர் குறிப்பிடும்

குறிப்பு உற்று உணர்தற்குரியது. முழுமுதற் பொருளைப் பிரித்துப் பார்ப்பவர்களுக்குப் புரியாத பொருள்; முழுமுதற்கடவுள் என்னும் தொடரை உற்று உணர்க.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வுப்பணி மேற்கொண்டுள்ள க.சேகர், "தமிழ்ப்பண்பாட்டு நோக்கில் கட்டைக்கூத்து" என்னும் தலைப்பில் சென்ற நூற்றாண்டில் தெருக்கூத்து நாடகங்கள் நடத்தப்பட்ட மரபு வழியான செய்திகளைத் தொகுத்து வழங்கியுள்ளார்; பழைய நாட்களில் ஒலி பெருக்கி கிடையாது; ஆர்மேனியப் பெட்டியில் கட்டை அமைப்புப்படி நாலுகட்டை ஆறு கட்டை என்று சுரம் அமைத்து ஓங்கிப்பாட வேண்டும். ஆர்மேனியப்பெட்டி, மிருதங்கம் முக்கிய வாத்தியக்கருவிகள். அதன்பின் புலத்திலேயே பாடல் இசை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைந்த கட்டைக் கூத்தை தமிழகம் எங்கும் போற்றினார்கள். பிற்காலத்தில் ஒலிபெருக்கி, திரைக்காட்சி போன்ற புதிய படைப்புகள் தோன்றிய பின்பு பழைய அமைப்புகள் மறையத்தொடங்கின. ஆசிரியர் க.சேகர் கட்டைக்கூத்தின் பல்வேறு செய்திகளை நினைவு கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் இரா.கோதண்டராமன் **"இறந்த காலம் ஒரு புதிய பார்வை"** பலமுறை படிக்க வேண்டிய மொழி நூல் கட்டுரை என்பதைக் குறிப்பிடவேண்டும்.

*"நீண்டுயர் புகழ் சிறக்க*
*நிலவிடு மதுரை தன்னில்*
*ஈண்டிய புலவர் போற்றும்*
*இனிய செந்தமிழ்ச் சங்கத்தை*
*வேண்டியங் கமைத்தான் எங்கள்*
*வித்தகக் கலைஞர் வேந்தன்*
*பாண்டித்துரை யின் கீர்த்தி*
*பல்லாண்டு வாழ்க மாதோ!"*

தவத்திரு. **கவியோகி** அவர்கள்

# சிலப்பதிகாரப் புதையல்கள்

## 12 சிலம்பின் அடையும் நடையும்

- முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**

சிலம்பு என்பது ஒலியால் பெற்ற பெயர். சில் சில், சல் சல், சல சல என்பன ஒலிக்குறிப்பு இரட்டைக் கிளவிகளே. சிலம்பு, சலங்கை, சல்லரி, சலசலப்பு, சலம் முதலியன இவ்வொலிக்குறிப்பு வழிச் சொற்களே.

சிலம்புதல் - ஒலித்தல்; கல்லும் மணியும் பரலாய் ஒலியெழுப்பும் காலணியும், கம்போடு கம்பு மோதி ஒலிக்கும் கம்பாட்டமும், எதிரொலி செய்யும் மலையும் 'சிலம்பு' எனப்படுதல் இவ்வொலிக் குறிப்பாலேயே ஆம். சிலம்பி என்பதோர் பூச்சி; அது சிலந்தி என்று வழங்கப்பெறுகிறது. அரவம் என்னும் ஒலிப்பெயரைப் பாம்பு பெற்றது போல, ஓயாது ஒலிக்கும் ஒலிப்பெயராலேயே 'சிலம்பி' என அது வழங்கப்பெற்றதாம்.

"சிலம்பகம் சிலம்பப் பாடி" என்பது முருகாற்றுப்படை (40)

சிலம்பு எனப்படும் சிலப்பதிகாரப் பாவிகத்தில் சிலம்பு எவ்வெவ்வா றெல்லாம் அடைநயம் பெறுகின்றது என்பதையும் அவ்வடையின் நடைநயம் என்னென்ன என்பதையும் சுட்டுவதே இக்கட்டுரையாம்.

சிலம்பு என்பது அடைமொழி எதுவும் இன்றி நடைபெறும் இடமும் உண்டு (8:90; 9: 73, 74; 12:63 25:72). இச்சிலம்பு எனச் சுட்டும் இடமும் உண்டு (பதி.30). அச்சிலம்பு என்னும் சுட்டொடும் வருதல் உண்டு (பதி.30)

சிலம்பு காலணி ஆகலிற் காற்சிலம்பு (19:7) என் காற்சிலம்பு (20:61), என்காற் பொற்சிலம்பு (20:68) சீறடிச்சிலம்பு (16:92), அணிமணிக் காற்சிலம்பு (20:71) எனவும் காற்கணி (16:111), காலணி (16:127) எனவும் வழங்கப்பட்டுளது.

அழகிய வேலைப்பாட்டால் அணிசிலம்பு (4:47) சித்திரச் சிலம்பு (16:119) பொன்னஞ் சிலம்பு (29:9:2) பொற்றொழிற் சிலம்பு (20:42) போற்றருஞ் சிலம்பு (16:116) என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. செவ்விய பொன்னால் செய்யப்பட்டது என்பதைச் செம்பொற்சிலம்பு (19:23) என்கிறது.

உள்ளிடு பரலை உடைமையால் சில்லரிச்சிலம்பு (பதி.25) இணையரிச்சிலம்பு (20:27) எனப்பட்டது.

சிலம்பின் ஒலியின்பம் கருதிப் "பண்ணமை சிலம்பு" (பதி.18) என்றும், தீமை நேர்தற்கு இடமாகலின் தீவினைச் சிலம்பு (25:69) செய்வினைச் சிலம்பு (16:160) சூழ்வினைச் சிலம்பு (பதி.58) என்றும் கூறப்பட்டது.

ஒற்றைச்சிலம்பு தனிச்சிலம்பு (23:10) என்றும், நின்ற சிலம்பு (19:2) என்றும், அரண்மனைச்சிலம்பு கோயிற்சிலம்பு (16:145) என்றும் யாமுடைச்சிலம்பு (20:69) என்றும் கூறப்பட்டன.

சான்றாய் அமைந்து நடுவுநிலையை நாட்டிய நயன்போற்றும் வகையில் செஞ்சிலம்பு (25:73; 29:11:4) என்று இருமுறையும் கூறப்பட்டன.

மாதவியார் அணிந்த காலணிகள்,

***"பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை***
***அரியகம் காலுக் கமைவுற வணிந்து"***

என்று கூறப்பட்டது (16:84-5). இதில் வரும் நூபுரம் என்பது சிலம்பு என்பதன் வடமொழிச் சொல்லாகும்.

***"நிலம்பக வீழ்ந்த சிலம்பாறு"***

என்பதற்கு (11:108) சிலம்பாறு என்றது ஓராறு என்று அருஞ்சொல் உரைகாரரும் சிலம்பாறு அவ்யாற்றின் பெயர் என்று அடியார்க்கு நல்லாரும் உரைவரைந்தாராக அவ்யாறு 'நூபுரகங்கை' எனப் பெயர்த்திரிபு செய்யப்பட்டு வழங்குதல் அழகர்மலை செல்வார் எவரும் அறிந்தது. "சிலம்பாற்றினை நூபுரகங்கை என்பர்" என்பர் பெரும்பேராசிரியர் உ.வே.சாமிநாதர் (சிலப்.18:108-11 அடிக்குறிப்பு).

புலமைப்படைப்பில் இடம் பெறும் அடைகள் வாளா அமைவன அல்ல; உள்ளீடு மிக்கவை என்பதை உணர,

"**தீவினைச் சிலம்பு** காரணமாக
ஆய்தொடி அரிவை கணவற் குற்றதும்
வலம்படு தானை மன்னன் முன்னர்ச்
**சிலம்பொடு** சென்ற சேயிழை வழக்கும்
**செஞ்சிலம் பெறிந்து** தேவி முன்னர்
வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி"

என்றும் இவ்வாறு அடிகளுள் சிலம்பு மும்முறை இடம்பெற்றதும், கோவலன் கொலைக்கு மூலமாக இருந்த சிலம்பைத் **தீவினைச் சிலம்பு** என்றதும், கண்ணகி கையில் இருந்த சிலம்பு பயன் செய்திலதாகலின் வாளா சிலம்பு என்றும், அரண்மனைக்கண் இருந்ததும் கோவலன் வழிப்பெற்றதுமாம் **சிலம்பே செம்மையை நிலைநாட்டியதாகலின் செஞ்சிலம்பு** என்றும் கூறப்பட்ட அருமை பாவிகத் துய்ப்புடையார்க்குப் பாலொடு தேன்கலந்த பான்மையவாம் அடை நடைகளாம் என்க.

தேவி சிலம்பு பெயரளவில் நின்றது; எங்கும் வெளிப்பட்டிலது. அவர் வயம் இருந்ததும், களவு போய சிலம்பும் காட்சிப்பட்டில. கண்ணகி கைச்சிலம்போ ஒற்றைச்சிலம்பு என்ற அளவில் நின்றது. கோவலன் தந்த சிலம்பே, மீள வந்து கண்ணகியாரால் உடைக்கப்பட்டு மணி மன்னவன் கன்னத்தில் அறைந்து மன்னனையும் தேவியையும் காவு வாங்கிய செஞ்சிலம்பு ஆயது என்பது மெய்ப்பிக்கப்படுவதாம். செஞ்சிலம்பே நம் சிலம்புக்காவிய மூலத் தூண்டலாம் என்க.

## நெஞ்சுறைந்தாரே !

*பிறந்தோம் இறந்தோம் என்றில் லாமல்*
*பேரும் புகழும் பெறலே மனிதன்*
*சிறந்த செயலாய் இருத்தல் நன்றதில்*
*செந்தமிழ்க் குழைத்தல் அதனின் சிறப்பாம்*
*புரவல ராகவே தமிழ்ச்சங் கத்தைப்*
*பூத்திட வைத்தவர் பாண்டித் துரையாக*
*மறவராம் பாசுக் கரசே துபதியும்*
*மறவா வண்ணம் நெஞ்சுறைந்தாரே!*

அன்புடன்,
திருலோக்கி
புலவர் **ந.ஞானசேகரன்.**

# குயில் பாட்டில் மெய்ப்பாடு

பேரா **செ.வை.சண்முகம்**
மொழியியற்புலம் (ப.நி.),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
கைபேசி: 98651 96476

**சென்ற இதழின் தொடர்ச்சி**

### 4. கருத்தாடல் நோக்கு

இங்குக் கருத்தாடல் நோக்கில் ஒட்டுமொத்தப் பாடலில் காணப்படும் மெய்ப்பாடும்; குயில், குரங்கு, முனிவர், கவிஞர், கதை மாந்தர் ஆகியோர் பேச்சில் காணப்படும் மெய்ப்பாட்டோடும் செயலின் எதிர்வினையாகக் கவிஞர், குரங்கு ஆகியோரிடத்துக் காணப்படும் குயிலின் மெய்ப்பாடும் ஆங்காங்கே விளக்கப்படும்.

### 4.1. முழுப்பாட்டு

குயில்பாட்டு முழுவதும் வியப்பு (மருட்கை) உணர்வு மேலோங்கி இருப்பதாகத் தோன்றுகிறது. குயில், பாட்டுப் பாடுவதாகவும், அதன் காதல் உணர்வால் கவிஞர், குரங்கு, மாடு ஆகியவைகளைக் காதலிப்பதாகக் கூறுவதும் வியப்புக்கு உரியவையே.

'விந்தை' (11, 142, 193, 194, 195, 354 (2), 'வியப்பு' / (141, 203), 'ஆச்சரியம்' (194), அற்புதம் (355) 'அதிசயம்' (358) ஆகியவை குயில்பாட்டில் பதிவாகியுள்ள சொற்கள். அவை புதுமை காரணமாகத் தோன்றும் மருட்கை மெய்ப்பாடாகக் கொள்ளலாம். தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலிலேயே (26.1) காதலுக்கு ஆகாத குற்றங்களில் ஒன்றாக 'வியப்பு' என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு இளம்பூரணர் 'தம்மைப் பெரியராக நினைத்தல்' என்றும், பேராசிரியர் 'தலைமகள்பால் தெய்வத்தன்மை கண்டான்போல் வியந்து ஒழுகல்' என்றும் விளக்கியுள்ளார்கள்.

தம்மைப் பெரியராக நினைத்தல் என்றும், உரியியலில் 'ஐ வியப்பாகும்' (உரியியல், 87) என்பதற்கு அதிசயத்தல், ஆச்சரியம் என்றும் பாலசுப்பிரமணியன் 2016:368) விளக்கம் எழுதியுள்ளார்.

மெய்ப்பாட்டியலில் வரும் மருட்கை என்பதற்கு வியப்பு என்று எல்லோராலும் பொருள் எழுதப்பட்டுள்ளதால் மருட்கை, வியப்பு ஆகிய இரண்டும் ஒரு பொருள் பல சொல்லே. தண்டியலங்காரம் (70) சுவை

அணி என்று குறிப்பிட்டு 'வியப்பு' என்று ஒரு அணி வகைக்குப் பெயரிட்டுள்ளது மருட்கை அணியாகவே கருதப்படுகிறது.

திகைப்பு (58, 203, 210. 214) திகைத்தேன் (213) என்ற சொற்களும் வியப்பின் உச்ச கட்ட நிலையைப் புலப்படுத்துவது ஆகும். சித்தந் திகைப்பு என்று (203, 210) 'சித்தம்மயங்கித் திகைப்பு' (58), 'ஓங்குந் திகைப்பு' என்ற தொடர்கள் திகைப்பு அறிவோடு தொடர்பு உடையதைப் புலப்படுத்துகின்றன. முதன்முதலில் பரிபாடலில் (27. 47 'திகைத்து' என்ற வினைவடிவம்) 'சித்தம் திகைத்து' என்ற தொடராக வந்துள்ளது. எனவே திகைப்பு, வியப்போடு அறிவு சார் உணர்வு கலந்தது என்ற முறையில் அடுத்த உயர் நிலை மெய்ப்பாடாகக் கருதத் தோன்றுகிறது.

பாட்டு முழுவதற்குமான மெய்ப்பாட்டைப் புதுமை காரணமாகத் தோன்றிய மருட்கை மெய்ப்பாடு என்று அடையாளப்படுத்தலாம்.

குயில் பாடுவதைக் கண்ட கவிஞர் 'இன்னிசைத் தீம்பாடல் இசைத்திருக்கும் விந்தைதனைக் கனவிலே கண்டேன் யான்' (11-2) என்னும்போது குயில் பாடுவது கவிஞருக்கு விந்தையாக உள்ளது என்று நேரடியாகக் குறிப்பிட்டுள்ளது புதுமை என்ற காரணத்தால் ஆகும். எனவே, அது கவிஞர் உணர்வின் வெளிப்பாடு.

காலைப் பொழுதை வருணிக்கும்போது 'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி / மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சிதந்து / விண்ணை வெளியாக்கி விந்தை செயுஞ் சோதி' (141-2) என்று கூறும்போது வியப்பு, விந்தை என்ற இரண்டு சொல்லையும் கையாண்டுள்ளது புதுமையின் ஆழம் தெளிவாகிறது. அத்தோடு 'இன்பக் களியில் இயங்கும் புவி கண்டேன்' (144.1) என்று கூறியது உவகை மெய்ப்பாட்டின் காரணியான புலனும் (அறிவுடைமை) கலந்துள்ளது புலனாகிறது. அதாவது மருட்கை, உவமைக்கு வழி வகுத்துள்ளது.

இன்னொரு நிலையில் 'நீரைப்படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்' *(185)* என்பது உலகமே விந்தை ஆகும். அடுத்த நிலையில் அதை விடப் பாட்டு என்று கூறுவது மனிதப் படைப்புக்கும் கவிதையின் சிறப்புக்கும் உரியது என்ற காரணத்தால் ஆகும். 'ஆனாது நின்ற அதிசயங்கள் யாவினுமே/ கானா முதம் படைத்த விந்தையடா' (193) என்று கூறியுள்ளதில் 'ஆனாது நின்ற அதிசயங்கள்' என்று குறையாமல் இருக்கும் இயற்கைப் பொருள்களை 'அதிசயம்' என்று கூறுவதும் ஒரு புதுமையே.

மறுபடியும் இயற்கையைவிட மனிதர் படைத்த இசையும் நேரடியாக ஒப்பிட்டு, 'காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில் / பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா' (194) என்று புகழ்வது மனிதச் செயலுக்குப் பாரதி தரும் முக்கியத்துவம் புலன் ஆகும். அதே சமயத்தில் அவருடைய பார்வையில் பெருமை என்ற புதிய காரணியால் மருட்கை மெய்ப்பாட்டுக்குச் சேர்கிறது.

குயில், மாட்டைக் காதலித்ததை விளக்கும்போதும் குயிலின் காதலுக்கு இடையூறு போல் தோப்புக்குள் பிற பறவைகள் வந்ததை 'இன்பக் கதையி னிடையே தடையாகப் புகுந்த வியப்பினையும்' (203) என்று கூறியது செயல் அதாவது ஆக்கம் என்ற காரணியால் மருட்கை மெய்ப்பாடாகக் கொள்ளலாம்.

குயில் முற் பிறவி கதை கூறிக் கவிஞரைச் சமாதானப்படுத்தியதும் குயிலைக் கையில் கொண்ட போதும் 'கொண்டதனை முத்தமிட்டேன் கோகிலத்தைக் காணவில்லை! / விண்டுரைக்கமாட்டாத விந்தையடா! விந்தையடா!' (354) என்ற கவிஞர் கூற்றில் பல தடவை அமைந்து விந்தை பெருக்கத்தைப் புலப்படுத்துகிறது. அதனால்தான் 'வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்'கும்படிக் கேட்டுக் கொண்டார் என்று எண்ணவும் இடம் கொடுக்கிறது.

### 4.2. கதைமாந்தர்கள் மெய்ப்பாடு

குயில் தனியாகவும் கவிஞர் குரங்கு, மாடு ஆகியோரிடமும் பேசுவதாக அமைந்துள்ளது. எனவே குயில் பேச்சில் வெளிப்படும் மெய்ப்பாடும் அதைக் கேட்டவர்களின் மெய்ப்பாடும் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவை அடுத்தடுத்து விளக்கப்படும்.

### 4.2.1. குயில் – கவிஞர் / காதலர்

குயில் மாஞ்சோலையில் 'காதலிடத்துக் கூடி களியுடனே வாழாமோ? / நாதக் கனலிலே நம்முயிரைப் போக்கோமோ? என்று பாடியதை 'என்று எண்ணி ஏக்கமுறப் பாடிற்றால்' (15-6) என்று கவிஞரே குறிப்பிட்டுள்ளதால் அதன் பாட்டில் 'ஏக்க' உணர்வு கலந்துள்ளது என்பது தெளிவு. அதைத் தொல்காப்பிய கருத்துப்படி வருத்தம் காரணமாகத் தோன்றும் இளிவரல் மெய்ப்பாடாகக் கொள்ளலாம்.

ஆனால் 'காதல் காதல் காதல் / காதற் போயிற் காதற் போயிற் / சாதல் சாதல் சாதல்' என்று தொடரும் 10 பாடல்களில் (19-28)

'அதிலோர்/ இன்பவெறியும் துயரும் இணைந்தனவால்' (30) என்று கூறுவதில் இன்ப வெறி என்பது 'புணர்வு' என்ற காரணி அடிப்படையில் உவகை மெய்ப்பாடும், துயர் என்பது 'இழவு (இழத்தல்)' என்ற காரணி அடிப்படையில் அழுகை மெய்ப்பாடும் கலந்துள்ளன என்று ஆகிறது.

அவைகளை 'மோகனப்பாட்டு' (29) என்றது கேட்போர் என்ற முறையில் உண்டான எதிர்வினை அதாவது உணர்வு ஆகும். மோகனம், மயக்கம் உண்டாக்குவது என்று பொருள். அதாவது பாட்டின் இனிமையால் உண்டாக்கிய உணர்வு ஆகும். எனவே புலன் என்ற காரணியால் கவிஞருக்கு உண்டான உவகை மெய்ப்பாடு ஆகும்.

அதே சமயத்தில் 'காதலை வேண்டிக் கரைகின்றேன். இல்லையெனில் / சாதலை வேண்டித் தவிக்கின்றேன்' (35) என்று குயில் மறுபடியும் கூறியது தெளிவாகத் தளர்ச்சி அதாவது அசைவு காரணி அடிப்படையில் குயிலின் அழுகை (அவலம்) மெய்ப்பாடு ஆகும்.

'நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன். பாவியேன்' (50) என்பதும் குயில் கூற்றே. பின் பகுதியில் 'மஞ்சரே என்றன் மன நெகிழ்ச்சி காணீரோ' (52) என்று குயில் கூறியதில் மன நெகிழ்ச்சி என்பது உவகை மெய்ப்பாடு என்பதைப் புலப்படுத்துகிறது. இங்கு 'நெஞ்சைப் பறிகொடுத்தேன் என்பதைப் பெருமிதம் என்ற மெய்ப்பாடாகக் கொள்ளலாம். அதற்குக் கல்வி, தறுகண்மை (வீரம்), புகழ், கொடை என்று கூறிய காரணிகளில் கல்வியே ஓரளவு பொருத்தமாகத் தோன்றுகிறது.

ஆனால் அதே சமயத்தில் 'பாவியேன்' என்று தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொள்வதால் இழிவு காரணமாகத் தோன்றும் அழுகை (அவலம்) மெய்ப்பாடு என்று கொள்ளலாம். இங்குத் தறுகண், அழுகை என்று இரண்டு மெய்ப்பாடு கலந்துள்ளன என்று ஆகிறது.

'சின்னக் குயிலிதனைச் செப்பிய போழ்தனில் என்னைப் புதியதோர் இன்பம் சுரங்கவர/ உள்ளத்திடையேயும் உயிரிடையேயும் ஆங்கு அந்தப்/பிள்ளைக் குயிலினதோர் பேச்சன்றி வேறற்றேன்' (55) என்பது குயில் பேச்சைக்கேட்ட கவிஞருக்கு உண்டான மெய்ப்பாடு ஆகும்; அதாவது கேட்போர் மெய்ப்பாடு.

'புதியதோர் இன்பம் சுரங்கவர' என்பது மகிழ்ச்சி என்ற உவகை மெய்ப்பாடு புலன் காரணியால் அமைகிறது. அதே சமயத்தில் 'விள்ள

ஒலிப்பதல்லால் வேறோர் ஒலியில்லை. சித்த மயங்கித் திகைப்பொடு நான் நின்றிடவும் (57.2, 58) என்பதும் கேட்போர் என்ற முறையில் கவிஞர் கூற்றுதான். அதாவது கவிஞர் ஒரு கதைமாந்தர் என்ற முறையில் குயிலின் அதீத திறமை அறிவை மயக்கித் திகைக்கச் செய்துவிட்டது என்று கொள்ளலாம். மெய்ப்பாடு நோக்கில் சித்த மயங்குதல் அசைவால் (தளர்ச்சி) ஏற்படும் அழுகை (அவலம்) மெய்ப்பாடு என்றும், 'திகைத்தல்' என்பது ஆக்கம் (ஒன்றன் செயலால் ஏற்படுவது) காரணியாக மருட்கை மெய்ப்பாடு என்றும் கொள்ள வேண்டியுள்ளது. அல்லது 'சித்த மயங்கித் திகைப்பொடு' என்பதைத் தொடராகக் கொண்டு திகைப்புக்கு அடையாகக் கொண்டால் தளர்ச்சி அதிகம் ஏற்பட்டது என்று பொருள்பட்டு அவல மெய்ப்பாடு அதிகம்பெறும்.

'அடுத்த நான்கா நாளில் வந்தருள வேண்டும் மறவாதீர் மேற்குலத்தீர் (62, 63) 'ஆவி தரியேன், அறிந்திடுவீர் நான்காநாள்/ பாவியிந்த நான்குநாள் பத்துயுக மாக் கழிப்பேன்/ சென்றுவரு+வீரென் சிந்தைகொடு போகின்றீர்/ சென்று வருவீ ரெனத் தேறாப் பெருந்துயரம் கொண்டு சிறு குயிலும் கூறி' (65-66) என்னும்போது பெருந்துயரம் கொண்டு என்பதால் தளர்ச்சி காரணமாக அவல மெய்ப்பாடு அமைந்துள்ளது. வருவீர் என்பது முதலில் 'சென்றுவரு+வீரென்' என்று '(சென்று)+வருவீ+ரென' என்று இரண்டு வகையில் சீரமைப்பு பெற்றுள்ளது பின்னது அவசரத்தையும் முன்னது நிதானத்தையும் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

'எண்ணுதலும் செய்யேன் இருபது பேய் கொண்டவன் போல் கண்ணும் முகமும் களிப்பேறி. (67)... கொம்புக் குயிலுருவம் கோடி பலகோடியாய்/ ஒன்றே அதுவாய் உலகெலாம் தோற்றமுறச் சென்றே மனைபோந்து சித்தந் தனதின்றி/நாளொன்று நான் பட்ட பாடு அனைத்தும்/தாளம் படுமோ தறிபடுமோ' (68-70) என்னும்போது கண்டோர் என்ற முறையில் கவிஞரின் எதிர்வினை வருத்தம் என்ற காரணியால் தோன்றும் இளிவரல் மெய்ப்பாடாக அமைந்துள்ளது. 'நான் பட்ட பாடு' பெரிதுபடுத்தப்பட்டுள்ளதை அறியலாம். எனவே 'பாடு' துன்பம் என்று பொருள்பட்டு இளிவரல் மெய்ப்பாடு அதிக அழுத்தம் பெறுகிறது. உண்மையில் கருத்தளவில் இளிவரல் மிகவும் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது. உடல் உணர்ச்சியை விட மன உணர்ச்சி மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 4.2.2. குயில் – குரங்கு

குயில், தோப்பில் குரங்கைப் பார்த்து 'வானரரே, ஈடறியா மேன்மை அழகு ஏய்ந்தவரே' என்று (91) கூறித்தொடர்ந்து 'நெருப்புச் சுவைக் குரலில் ஆசை ததும்பி அமுதூறப் பாடிற்று' (108) என்பதால் காரசாரமாகக் குயில் தன்னுடைய காதல் உணர்வு (புணர்வு) மூலம் உவகை மெய்ப்பாட்டைப் புலப்படுத்தியது என்று கொள்ளலாம்.

ஆனால் அதைக் கண்ட கவிஞர் 'ஆண் குரங்கு தன்னுடனே ஏதேதோ கூறி இரங்கு நிலை கண்டேன்' (87) என்பதால் கண்டோர் என்ற முறையில் பெண் குயில் ஆண் குரங்கிடம் பேசியது கவிஞராகிய கண்டோருக்கு ஏற்பட்ட இரக்க - பரிதாப உணர்ச்சியின் வெளிப்பாடாகத் தோன்றுகிறது. இதை எந்த மெய்ப்பாட்டில் அடக்குவது என்ற கேள்வி எழுகிறது. இளிவரல் மெய்ப்பாட்டில் உள்ள மென்மை என்ற காரணியாகக் கருதினால் இது இளிவரல் மெய்ப்பாடாக அமையும்.

'குரங்கினையும்/ சிந்தக்கருதி உடை வாளைக் கையில் சேர்த்தேன் (88) என்பதில் வெகுளி மெய்ப்பாடு உள்ளடங்கியிருப்பது தெளிவு. அப்படியானால் வெகுளி மெய்ப்பாட்டுக்கு இளிவரல் மெய்ப்பாடு காரணம் ஆகிறது.

குயிலின் பேச்சைக் கேட்ட குரங்கு 'மதிமயங்கிக் கள்ளினிலே/ முற்றும் வெறிபோல் முழு வெறி கொண்டு (111)... தெய்வதமே பெருங்காதல் கொண்டுவிட்டேன் (114)... இப்பொழுதே நின்னை முத்தமிட்டுக் களியுறுவேன்' (116) என்று நேரடியான குரங்கு பேச்சு என்ற முறையில் புணர்வு காரணியாக அமைந்த குரங்கின் உவகை மெய்ப்பாடு அமைந்துள்ளதாகக் கருதலாம்.

முழுப் பேச்சையும் மறைமுகமாகக் கேட்ட கவிஞர் குயிலும் தானும் ஒரு காதலர் என்ற முறையில் அந்தப்பேச்சு தன் மனதைப் புண் செய்ததாகக் கூறுகிறார். 'சொற்றைக் குரங்கும் தொழுமாடும் வந்தெனக்கு/முற்றும் வயிரிகளா மூண்ட கொடுமை' (205) என்று பின்பகுதியில் காதல் எதிரி (வயிரி) என்று குறிப்பிட்டுள்ளதும் அறியத் தகுந்தது. இது வெகுளி மெய்ப்பாடு ஆகும்.

(குரங்கு) 'என்று பல பேசுவது என்னுயிரைப் புண் செயவே கொன்றுவிட எண்ணிக் குரங்கின் மிசை வீசினேன்' (117) என்பதால் கேட்டவர் என்ற முறையில் கவிஞருக்குக் கொலை காரணியாக வெகுளி

மெய்ப்பாடு தோன்றியது என்று கொள்ளலாம். அதனால் 'உள்ளம் பதை பதைக்க/ காணுந் துயர் நலிவுறுத்த நான் மீண்டும்/ பேணுமனை வந்தேன்' (122-4) என்றும் 'நாசக்கதை' (134) என்றும் குறிப்பிட்டுள்ளது வெகுளி மெய்ப்பாடு தொடர்கிறது என்று ஆகிறது.

அடுத்து கதைமாந்தர் நிலை மறந்து, கவிஞராகக் "காலைக் கதிரழகின் கற்பனையில் பாடுகின்றேன்' (136) என்று காலைப் பொழுதின் அழகை வருணித்து 'இன்பக் களியின் இயங்கும் புவி கண்டேன்' (144.1) என்று கூறியது உவகை மெய்ப்பாட்டின் புலப்பாடு, ஆனாலும் உடனே அடுத்த அடியிலேயே கவிஞர் கதைமாந்தர் நிலை பெற்றுத் 'துன்பக் கதையின் தொடருரைப்பேன்' (144.2) என்று கூறியது கவிஞர் என்ற முறையில் இயற்கை இன்பம் அனுபவிக்கும் உணர்வு. ஆனால் வாழ்க்கை உணர்வு வந்து சுய நினைவு வந்ததும் குயிலைக் காதலித்த கதைமாந்தர் என்ற முறையில் குயில் குரங்கிடம் காதல்பேச்சு பேசியது மனதில் அழுகை (அவலம்) மெய்ப்பாடு தோன்றிவிட்டது. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் என்பது இங்கு முதல்அடியில் இன்பமும் (உவகை) அடுத்த அடியில் துன்பமும் (அழுகை) அமைந்துள்ளன.

### 4.2.3. குரங்கு – மாடு

மறுநாள் சோலைக்குப் போன போது குயில் கிழக்காளைக்குக் கதை சொன்னதும், அதை மாடு ஆழ்ந்த சிந்தனையோடு ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருப்பதையும் பார்த்த கவிஞர் 'கண்டேன், வெகுண்டேன், கலக்கமுற்றேன், நெஞ்சில் அனல்/ கொண்டேன் குமைந்தேன், குமுறினேன், மெய் வியர்த்தேன்' (150) என்று கூறியது கண்டோரின் வெகுளி மெய்ப்பாட்டின் ஆழம், பல உணர்வுகளாக விளக்கப் பட்டுள்ளதாகக் கொள்ளலாம். உடனே 'கொல்லவாள் வீசல் குறித்தேன்' (151) என்று கூறியதுகொலை உணர்வு ஆகும். தொல்காப்பியம் வெகுளி மெய்ப்பாட்டின் காரணிகளில் ஒன்றாகக் கொலை என்பதைச் சேர்ந்துள்ளதால் (மெய்ப்பாடு, 10) வெகுளியின் உச்சக்கட்ட உயர்வாகக் கொலை உணர்வு அமைவதாகக் கருதலாம். 'இப் பொய்ப்பறவை' (151) என்பதில் உள்ள 'பொய்' என்ற அடையும் வெகுளி மெய்ப்பாட்டின் அடையாளமே. 'இப்பொய்ப்பறவை/சொல்லுமொழி கேட்டதன்பின் கொல்லுதலே சூழ்ச்சியென முன்போல் மறைந்து நின்றேன்' (151) என்பது கோபம் குறைந்ததன் வெளிப்பாடு.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# தமிழர் கண்ட முழுமுதற் கடவுள்

பேரா **ப.மருதநாயகம்**
ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113
கைபேசி: 94427 87727

**சென்ற இதழின் தொடர்ச்சி**

இக்கருத்தைக் கவிதையாக்கும்போது தேவார ஆசிரியர்களும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தாரும் கையாளும் யாப்புவகைகளிலும், உத்திகளிலும், உவமைகளிலும் பல ஒற்றுமைகளைக் காணலாம்.

*நம்மாழ்வார்,*

*இறந்ததுவும்நீயே எதிர்ந்ததுவும் நீயே*
*நிகழ்வதோநீ; இன்னேயானால்*
*சிறந்த நின்தன்மை அதுஇது உதுவென்று*
*அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்*
*கறந்தபால் நெய்யே! நெய்யினின் சுவையே*
*கடலினுள் அமுதமே! அமுதில்*
*பிறந்த இன்சுவையே! சுவையது பயனே!*
*பின்னைதோள் மணந்த பேராயா!*

என்று பாடுவார். பரம்பொருள் காலம் கடந்தது என்னும் இக்கருத்து நல்லெழுநியார் பரிபாடல் பதின்மூன்றாம் பாடலில் இதே அழகுடன் சொல்லப்படுகிறது.

*முடிந்தது முடிவது முகிழ்ப்பதும் அவைமூன்றும்*
*கடந்தவை அமைந்த கழலின் நிழலவை*
*இருமை வினையுமில வேத்துமவை*
*ஒருமை வினைமேவும் உள்ளத்தினை.*

இறைவனே யாவும் ஆவான் என்ற கருத்தை மேலும் அழுத்தமாகக் கூற "நானும் நீயே" என்று துணிந்து கூறும் நம்மாழ்வார் பாடலும் உண்டு.

*யானும் நீதானே யாவதோ மெய்யே*

*அருநரகவையும் நீயானால்*

*வானுயர் இன்பம் எய்திலென்?*

*மற்றை நரகம் எய்திலென்? எனினும்*

*யானும் நீ தானாய்த் தெளிதொறும் நன்றும்*

*அஞ்சுவன் நரகம் நானடைதல்*

*வானுயர்இன்பம் மன்னி வீற்றிருந்தாய்!*

*அருளுநின் தாள்களை எனக்கே.*

இறைவனே காற்று, தீ, நீர், வானம், மண் ஆகிய ஐந்து பருப்பொருட்களாயும் பிற உயிரினங்களாயும் இருப்பவன் என்பதை நம்மாழ்வார்,

*பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! நீ இன்னே*

*சிறந்த கால் தீ நீர் வான் மண் பிறவுமாய பெருமானே!*

*கறந்த பாலுள் நெய்யே போல் இவற்றுள் எங்கும் கண்டுகொள்*

*இறந்துநின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே!*

என்று வியந்து பாடுவார்.

*திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில்,*

*பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண் நின்ற நான்குமாய்*

*தீ நிலாய மூன்றுமாய்ச் சிறந்த கால் இரண்டுமாய்*

*மீ நிலாய தோன்றுமாகி வேறுவேறு தன்மையாய்*

*நீ நிலாய வண்ணம் நின்னையார் நினைக்க வல்லரே?*

என்று கேட்பார். இவர்களுக்கெல்லாம் சில நூற்றாண்டுகள் முன்னரே,

*ஒன்றினிற் போற்றிய விசும்பும் நீயே*

*இரண்டில் உணரும் வளியும் நீயே*

*மூன்றினுள் உணரும் தீயும் நீயே*

*நான்கினுள் உணரும் நீரும் நீயே*

*ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே*

என்று பதின்மூன்றாம் பரிபாடலும்

*தீவளி விசும்பு நிலன் நீரைந்தும்*
*ஞாயிறுந் திங்களு மறனு மைவருந்*
*திதியின் சிறாரும் விதியின் மக்களும்*
*மாசி லெண்மரும் பதினொரு கபிலருந்*
*தாமா விருவருந் தருமனு மடங்கலும்*
*மூவே ழுலகமு முலகினுள் மன்பதும்*
*மாயோய் நின்வயிற் பரந்தவை*

என்று மூன்றாம் பரிபாடலும் இக்கருத்தை முருகியல் இன்பம் தரும் கவிதைகளாக்கியுள்ளன.

9

திருமாலின் அவதாரமெனக் கருதப்படும் இராமனைக் கதைத் தலைவனாகக் கொண்ட இராமகாதை என்னும் அரிய காப்பியத்தை இயற்றிய கம்பன் ஆங்காங்கே திருமாலைப் பெரிதும் போற்றிப் பாராட்டியிருப்பினும் யாவும் கடந்த இறைவனையே முழுமுதற்கடவுளாகக் கண்டார் என்பதைச் சில பாடல்களால் அறிதல் இயலும். இதனால்தான் பாரதியார்,

*'எல்லையொன்றின்மை' எனும் பொருள் அதனைக்*
*கம்பன் குறிகளால் காட்டிட முயலும்*
*முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்*
*சாதியை அமரத்தன்மை வாய்ந்தது'* என்று உறுதி கொண்டிருந்தேன் என்பார். காப்பியத்தின் முதல் கடவுள் வணக்கப் பாடலிலேயே எல்லா உலகங்களையும் படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய மூன்று தொழில்களையும் செய்கின்ற ஒருவரே எமக்குத் தலைவர், அவரையே அடிபணிவோம் என்று கம்பர் அறைகூவல் விடுவது நோக்கற்பாலது.

சரயு நதி வெள்ளத்தைக் கம்பர்

*கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்*
*எல்லையின் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத்*
*தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்*
*பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்ததன்றே.*

என்று பாடுவார். சரயுநீர் வெள்ளம் ஒன்றாயிருந்தும் ஏரி, குளம் போன்ற பல நீர்நிலைகளில் பொருந்திப் பல பெயர்களுடன் வழங்குவது, பரம்பொருள் ஒன்றாயிருந்தும் பலசமயத்தவர் சூழ்ச்சிக்கு உட்பட்டுப் பலபெயர்களில் சொல்லப்படுவது போன்றது என்பது இப்பாடல் சொல்லும் கருத்தாகும்.

இராமனைக் கண்ட பெண்கள் நிலையைக் கம்பர்,

> ***தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழல் கமலமன்ன***
> ***தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கை கண்டாரும் அஃதே***
> ***வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக்கண்டார்***
> ***ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவுகண்டாரை ஒத்தார்.***

என்று வருணிப்பார்.

> இராமனது தோள்அழகைக் கண்ட பெண்கள் தோள் அழகையே பார்த்திருந்தனர்; திருவடிகளின் அழகைக் கண்டவர்கள் அவற்றின் அழகையே பார்த்திருந்தனர்; பெரிய கைகளின் அழகைக் கண்டவர்கள் அவற்றின் அழகையே பார்த்திருந்தனர். வாளையொத்த கண்களை உடைய மகளிருள் யாரும் இராமனது உடலழகை முற்றுமாகப் பார்க்கவில்லை. இவர்கள் இறைவனின் வடிவத்தில் ஒவ்வொரு கூறினையே காணும் ஒவ்வொரு சமயத்தினரை ஒத்திருந்தனர்.

இங்குள்ள மதங்களெல்லாம் முழுமுதற்கடவுள் ஒருவனே என்பதை அறிந்தும் அறியாதவைபோல் பிற சமயங்களோடு மாறுபட்டு இறைவனுக்கு ஒரு பெயரையும் ஒரு வடிவத்தையும் ஒரு பண்பையும் அளித்து அக்குறையுடைய தெய்வத்தை முன்னிறுத்தி வழிபடுவதைக் கம்பர் மறைமுகமாகக் கண்டிப்பதை இப்பாடலில் காணலாம்.

அயோத்தியா காண்டத்து மந்திரப்படலத்துக் கடவுள் வாழ்த்தில் "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறனும் உளன் என்ப" என்னும் அடிகள் நோக்குதற்குரியவை.

விண்ணிலிருந்து இறங்கி எல்லையின்றிப்பரந்த ஐம்பெரும் பூதங்களின் பொருள்கள் யாவற்றிலும் உடலும் உயிரும் போலவும் உயிரும் உணர்வும் போலவும் உள்ளும் புறத்தும் நிறைந்திருப்பவன்

என்று சான்றோர் கூறுவர். விசும்பு, நீர், காற்று, தீ, நிலம் ஆகியவற்றில் படர் பொருள் முழுவதுமாய் அவையவைதொறும் உடலில் உயிரென உள்ளும், உயிரில் உணர்வென, புறத்தும் கரந்து எங்கும் பரந்துள்ளவன் இறைவன் என்பது கருத்து.

திருவடி சூட்டுபடலத்தில் வரும் ஒரு பாடல் மும்மூர்த்திகள் என்று புராணங்களால் போற்றப்படும் தெய்வங்கள் பரம்பொருளினின்றும் வேறுபட்டவர்கள், பரம்பொருள் உட்புகுந்திருத்தலாலே தம் தொழில்களைச் செய்கின்றவர்கள் எனும் கருத்தினை முன் வைக்கும்.

*சீலமும் தருமமும் சிதைவில் செய்கையும்*
*சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய*
*மூலம் வந்துதவிய மூவர்க் காயினும்*
*காலம் என்றொரு வலை கடக்கலாகுமோ*

தவவொழுக்கத்தையும் அறத்தையும் படைத்தல் தொழிலையும் சூலத்தையும் சக்கரத்தையும் சொல்லாகிய கலைமகளையும் தரித்த, மூலப்பொருளாகிய பரம்பொருள் உட்புகுந்து உதவப்பெற்ற மும்மூர்த்திகளானாலும் காலம் என்னும் வலையிலிருந்து தப்புதல் இயலாது என்று கவிஞர் கூறுதலால் சிவன், திருமால், பிரமன் ஆகியோர் முழுமுதற் கடவுள் ஆகார் எனும் கருத்து வலியுறுத்தப்படுகிறது.

**10**

கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் தலையாய சித்தரும் பெருங்கவிஞரும் ஆவார். பாரதியாரால்

*என்றும் இருக்க உளம் கொண்டாய்*
*இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்*
*இன்றும் இருத்தல் செய்கின்றாய்;*
*இறவாய்; தமிழோடு இருப்பாய் நீ;*
*ஒன்று பொருள் அஃது இன்பம் என*
*உணர்ந்தாய் தாயுமானவனே!*
*நின்ற பரத்து மாத்திரமோ?*
*நில்லா இகத்தும் நிற்பாய் நீ*

என்று பாராட்டப்பெற்றவர். அச்சான்றோர் தமிழ் நூல்களை ஆழ்ந்து கற்றதோடன்றி வடநூற்கடலையும் நிலை கண்டுணர்ந்தவர். சைவ சமயம்

முதற்சமயம் என்பதும் அதுவே வேதாந்தத்திற்கு வித்தாக அமைந்தது என்பதும் அவர் நம்பிக்கை. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் தன்மைகளை விளக்குவது சைவ சித்தாந்தம். 'நான் பிரம்மம்' (அகம் பிரமாஸ்மி) என்பது வேதாந்தம். இவ்விரண்டும் வெவ்வேறு எனக் கூறியோர் உண்டு. ஆனால் 'சித்தாந்தமே வேதாந்தம்' என்றும் 'வேதாந்தத்தின் தெளிவே சித்தாந்தம்' என்று கருதிய மெய்ஞ்ஞானிகள் பலரும் தமிழகத்தில் வாழ்ந்துள்ளனர். திருமூலர்

*சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்*

*சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே*

என்பார். தாயுமானவர்,

*வேதாந்த சித்தாந்த சமரச சிவாநுபூதி*

*மன்ன ஒரு சொற்கொண்டு எனைத்தடுத்தாண்டு அன்பின்*

*வாழ்வளித்த ஞான குருவே*

என்று பாடுவார்.

இறைவனைப் போன்றே ஆன்மாவும் அநாதியானது என்னும் கருத்தைத் திருமூலரும் தாயுமானவரும் வலியுறுத்துவர்.

*பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்*

*பதியினைச் சென்றணு பாசம் அநாதி*

*பதியினை சென்றணு காப் பசு பாசம்*

*பதியணு கிற்பசு பாசம் நிலாவே*

என்பது திருமந்திரம்.

*"என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ?"*

*"என்று உளைநீ அன்றுளம் யாம்"*

என்பவை தாயுமானவரின் அடிகள்.

ஒரு சமயத்திற்கு உரிய தெய்வத்தைப் பற்றிப் பேசாது யாவும் கடந்த முழுமுதற் கடவுளைப் போற்றும் தாயுமானவரின் பாடல்கள் அரியவை.

*அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்*

*ஆனந்த பூர்த்தியாகி*

*அருளொடு நிறைந்தது எது? தன் அருள் வெளிக்குளே*
*அகிலாண்ட கோடி எல்லாம்*
*தங்கும் படிக்கு இச்சை வைத்து உயிர்க்கு உயிராய்த்*
*தழைத்தது எது? மனவாக்கினில்*
*தட்டாமல் நின்றது எது? சமய கோடிகள் எலாம்*
*தம்தெய்வம் எம்தெய்வம் என்று*
*எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கு இடவும் நின்றது எது?*
*எங்கணும் பெருவழக்காய்*
*யாதினும் வல்ல ஒரு சித்தாகி, இன்பமாய்*
*என்றைக்கும் உள்ளதெது? மேல்*
*கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது*
*கருத்திற்கு இசைந்தது அதுவே*
*கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்*
*கருதி அஞ்சலி செய்குவாம்.*

"பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணானந்தமே" என்று இறைவனைப் போற்றும் தாயுமானவர் சமயவாதிகள் நடத்தும் போராட்டங்கள் எல்லாம் வீணானவை என்று அறிவுறுத்துவார்.

*பூதலயம் ஆகின்ற மாயை முதல் என்பர் சிலர்;*
*பொறிபுலன் அடங்கும் இடமே*
*பொருள் என்பர் சிலர்; கரண முடிவு என்பர் சிலர்; குணம்*
*போன இடம் என்பர் சிலபேர்;*
*நாதவடிவு என்பர் சிலர்; விந்து மயம் என்பர் சிலர்;*
*நட்டநடுவே இருந்த*
*நாம் என்பர் சிலர்; உருவம் ஆம் என்பர் சிலர்; கருதி*
*நாடில் அரு என்பர் சிலபேர்;*
*பேதம் அற உயிர்கெட்ட நிலையம் என்றிடுவர் சிலர்;*
*பேசில் அருள் என்பர் சிலபேர்;*

*பின்னும் முன்னும் கெட்ட சூனியமது என்பர் சிலர்;*
*பிறவுமே மொழிவர்; இவையால்*
*பாதரசமாய் மனது சஞ்சலப் படும் அலால்*
*ப்ரமசுக நிஷ்டை பெறுமோ?*

என்று கேட்பார்.

"பொருள் வணக்கம்" என்னும் தலைப்பில் அமைந்த பாடல்களில் இறைவன் யாவற்றையும் கடந்தவன் என்பதைத் தெளிவுபடுத்தற்குத் தாயுமானவர் கையாளும் உத்திகள் பல.

*நித்தியமாய், நிர்மலமாய், நிட்களமாய்,*
*நிராமயமாய், நிறைவாய், நீங்காச்*
*சுத்தமுமாய்த், தூரமுமாய்ச், சமீபமுமாய்த்*
*துரிய நிறை சுடராய், எல்லாம்*
*வைத்து இருந்த தாரகமாய், ஆனந்த*
*மயம் ஆகி, மனம் வாக்கு எட்டாச்*
*சித்து உருவாய் நின்ற ஒன்றைச் சுகாரம்பப்*
*பெருவெளியைச் சிந்தை செய்வாம்.*

*ஜாதிகுலம் பிறப்பு இறப்புப் பந்தம் முக்தி*
*அருஉருவத் தன்மை, நாமம்*
*ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்*
*பிரிவு அறநின்று இயக்கம் செய்யும்*
*சோதியை, மாத்தூவெளியை, மனது அவிழ*
*நிறைவான துரிய வாழ்வைத்*
*தீது இல் பரம் ஆம் பொருளைத் திரு அருளே*
*நினைவு ஆகச் சிந்தை செய்வாம்.*

"கருணாகரக் கடவுள்" என்னும் தலைப்பில் அமைந்த பாடல் ஒன்றில்

*மைவிடாது எழுநீல கண்ட குருவே விஷ்ணு*
*வடிவான ஞானகுருவே*

*மலர்மேவி மறை ஓதும் நான்முகக் குருவே*
*மதங்கள் தொறும் நின்ற குருவே*
*கைவிடாதே என்ற அன்பருக்கு அன்பாய்க்*
*கருத்தூடு உணர்த்து குருவே*
*கருதரிய சிற்சபையில் ஆனந்த நர்த்தமிடு*
*கருணாகரக் கடவுளே.*

*பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே*
*பாவித்து இறைஞ்ச ஆங்கே*
*பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி, அப்*
*பனிமலர் எடுக்க மனமும்*

*நண்ணேன், அலாமல் இரு கைதான் குவிக்க எனின்*
*நாணும் என் உளம் நிற்றிநீ*
*நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால்*
*நான் பூசை செய்யல் முறையோ?*

என்று கேட்பார்.

"ஆனந்தமான பரம்" என்னும் தலைப்பில் அமைந்த பாடல் ஒன்றில் இறைவன் மாந்தரின் மனம், வாக்கு, காயம் ஆகிய யாவற்றையும் கடந்தவன் என்ற கருத்தைத் தாயுமானவர் வலியுறுத்துவார்.

*தெருளாகி, மருளாகி உழலும் மனமாய், மனம்*
*சேர்ந்து வளர் சித்து ஆகி அச்*
*சித்து எல்லாம் சூழ்ந்த சிவ சித்து ஆய், விசித்திரமாய்த்,*
*திரமாகி, நானாவிதப்*
*பொருளாகி, அப்பொருளை அறி பொறியும் ஆகி, ஐம்*
*புலனுமாய், ஐம்பூதமாய்ப்*
*புறமுமாய், அகமுமாய்த் தூரம் சமீபமாய்ப்*
*போக்கொடு வரத்தும் ஆகி*

*இருளாகி ஒளியாகி நன்மை தீமையுமாகி*
*இன்றாகி நாளையாகி*
*என்றுமாய் ஒன்றுமாய்ப் பலவுமாய் யாவுமாய்*
*இவை அல்ல ஆயநின்னை*

*அருளாகி நின்றவர்கள் அறிவது அல்லால் ஒருவர்*
*அறிவதற்கு எளிது ஆகுமோ?*
*அண்ட பகிரண்டமும் அடங்க ஒரு நிறைவு ஆகி*
*ஆனந்தம் ஆன பரமே!*

முழுமுதற் கடவுள் ஒருவனே என்பதைத் தெளிவுப்படுத்தத் தாயுமானவர் கையாளும் உத்திகள் நம் உள்ளத்தில் தைப்பவை.

*ஊரனந்தம் பெற்ற பேரனந்தம் சுற்றும்*
*உறவனந்தம், வினையினால்*
*உடலனந்தம் செய்யும் வினையனந்தம் கருத்*
*தோ அனந்தம், பெற்ற பேர்*
*சீரனந்தம் சொர்க்க நரகமும் அனந்தம் நற்*
*றெய்வமும் அனந்தபேதம்*
*திகழ்கின்ற சமயமும் அனந்தம் அதனால் ஞான*
*சித்தியாலுணர்ந்து*
*காரனந்தங்கோடி அருட்சித்த தென அன்பர்*
*கண்ணும் விண்ணும் தேக்கவே*
*கருதரிய ஆனந்த மழை பொழியுமுகிலை நம்*
*கடவுளைத் துரிய வடிவைப்*
*பேரனந்தம்பேசி மறையனந்தம் சொலும்*
*பெரிய மௌனத்தின் வைப்பைப்*
*பேசரும் அனந்தபத ஞான ஆனந்தமாம்*
*பெரிய பொருளைப் பணிகுவாம்.*

*அண்டமுடி தன்னிலோ பகிரண்டம் அதனிலோ*
*அலரி மண்டல நடுவிலோ*
*அனனடுவிலோ அமிர்த மதி நடுவிலோ அன்பர்*
*அகம் உருகி மலர்கள் தூவித்*
*தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்*
*திகந்தத்திலோ வெளியிலோ*
*திகழ் விந்து நாத நிலை தன்னிலோ வேதாந்த*
*சித்தாந்த நிலை தன்னிலோ*
*கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்*
*கண்ட சூனியம் அதனிலோ*
*காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ*
*கருவி கரணங்களோ யந்த*
*தொண்டர்களிடத்திலோ நீ வீற்றிருப்பது?*
*தொழும்பனேற்கு உளவு புகலாய்*
*சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்*
*சோதியே! சுக வாரியே.*

முழு முதற்கடவுளுக்கான இத்தகைய காட்சியைப் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மேலைமொழிக் கவிஞர் எவரிடத்தும் காண இயலாது.

11

கடவுள் வழிபாட்டில் பூக்களை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் தமிழர்கள். மலர்களையும், மலர்மாலைகளையும் இறைவனுக்குச் சூட்டுதலைத் தமிழரிடமிருந்து ஆரியர் கற்றனர். கடவுளைப் பாக்களால் பரவுதலிலும் தமிழர் மரபு வியப்பிற்குரியது. தொல்காப்பியர் தன்மைப்பரவல், முன்னிலைப்பரவல், படர்க்கைப்பரவல் என்னும் மூன்று வகையான பரவல்களைப் பற்றிப்பேசும் நூற்பாக்களுக்கு விளக்கம்தரும் பேராசிரியர், இறைவனை முன்னிறுத்தி, 'நீ', 'நீ' என்று அவன் புகழ் பேசுவதை முன்னிலைப் பரவலென்றும், 'அவன்', 'அவன்' என்று அவனைப் போற்றி வாழ்த்துதலைப் படர்க்கைப்பரவல் என்றும் புலப்படுத்துவார்.

*பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து*
*மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே*
*மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே*
*அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே*

*(சுந்தரர் தேவாரம்)*

என்பது முன்னிலைப் பரவலாகும்.

*உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்*
*மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்* *(பெரியபுராணம்)*

என்பது படர்க்கைப் பரவலாகும்.

ஆனால் தன்மைப்பரவல் என்பது இறைவன் தன்னையே பாராட்டிக்கொள்வதாக எழுதுவது அன்று என்றும் இறைவனின் அடியவன் ஒருவன் தன்னையொத்த அடியார்களைப் பாராட்டுவதன் மூலம் இறைவனைப் பாராட்டுவது என்றும் அரியதோர் விளக்கத்தைத் தருவார் பேராசிரியர். மேலும் அவர், "இறைவன் தன்னையே பாராட்டிக் கொள்வதாகச் செய்யுள் செய்தல் தமிழ் மரபு அன்று; "யான் இன்ன பெருஞ்சிறப்பினன் இன்ன தெய்வமென்று தன்னைத்தான் புகழ்ந்து கூறி நின்னைக் காப்பேன்; நீ வாழியே" எனத் தெய்வம் சொல்லிற்றாகச் செய்யுள் செய்தலும் ஆகாது" என்றும் தெளிவுபடுத்துவார். இது பகவத் கீதையில் கிருஷ்ணன் பேசுவதை நமக்கு நன்றாக நினைவூட்டக் காணலாம். தமிழர் தவிர ஏனைய இனத்தாரின் சமய நூல்களில் எல்லாம் தெய்வங்கள் தங்களையே வழிபட வேண்டும் என்றும் தாங்களே ஆற்றல் மிக்கவர்கள் என்றும் கூறிக்கொள்ளும்.

12

சமயம் கடந்த பொதுநிலையாகிய தமிழ்மரபின் உச்சவெளிப்பாடே இராமலிங்க அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்க நெறியாகும். "சாதி சமய சழக்கை விட்டேன், அருள் ஜோதியைக் கண்டேனடி" என்றுபாடி மகிழ்ந்தவர் அவர். தமிழ் இலக்கிய மரபு சொல்லாமற் சொல்லிய பொதுமை நெறியின் தன்மையை விளக்கி அதற்கு உருவம் அளித்த பெருமை அவரைச் சாரும். தமது சமரசச் சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பத்தில்,

> எல்லாமானவராயும் ஒன்றுமில்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற தனித்தலைமைக் கடவுளே!... எல்லா உயிர்கட்கும் இன்பம் தருவதற்கு அகத்தும் புறத்தும் விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி உண்மைக் கடவுள் ஒருவரே உள்ளார் என்றறிகின்ற மெய்யறிவை விளக்குவித் தருளினீர்... சைவம், வைணவம், சமணம், பவுத்தம் முதலாகப் பலபெயர்கொண்டு பலபடவிரிந்த அளவிறந்த சமயங்களும் அச்சமயங்களில் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவ சித்த விகற்பங்களென்றும் அச்சமயங்களில் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகள் என்றும் உள்ளபடியே எனக்கு அறிவித்து அச்சமய ஆசாரங்களைச் சிறிதும் அனுட்டியாமல் தடை செய்வித்து அருளினீர்... எல்லாவுயிர்களையும் பொதுமையில் நோக்கி எல்லாவுயிர்களும் இன்பம் அடைதல் வேண்டு மென்னும் கருணை நன்முயற்சியைப் பெறுவித்துச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி ஒன்றையே பற்றுமாறு செய்தீர்

என்று இறைவனுக்கு நன்றி தெரிவிப்பார். இப்பெருநெறி தோன்றுதற்கு, சங்கச் சான்றோரும் வள்ளுவரும் அடித்தளமிட்டனர். பின்னால் வந்த தமிழ்ச் செம்மல்கள் தம் பங்களிப்பைச் செய்தனர்.

கிரேக்கரும், ரோமானியரும், ஆரியரும், பிற எல்லாச் செவ்வியல் சமுதாயங்களும் பலநூறு ஆண்டுகளாகச் சிறு தெய்வ வழிபாட்டிலேயே நம்பிக்கை கொண்டிருந்தன என்பதைப் பிளேடோ போன்ற தத்துவ விற்பன்னர்களும் பலசமய அறிஞர்களும் எழுதியுள்ள நூல்களிலிருந்து அறியலாம். முழுமுதற் கடவுள் பற்றிய சிந்தனையை முதலில் முன்வைத்தவர் தமிழறிஞர்களே என்பது உறுதி. சிறு தெய்வ வழிபாடுகளும் சமயப் போர்களும் தமிழகத்திலும் இந்தியாவின் பிறபகுதிகளிலும் தொடர்ந்து நடந்து வந்த காலங்களிலும் தமிழ்ச்சான்றோர் யாவற்றையும் கடந்த பேராற்றல் ஒன்றே என்பதைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளமை வியப்புக்கும் பெரும்பாராட்டுக்கும் உரியதாகும்.

# இறந்தகாலம் - ஒரு புதிய பார்வை

பேராசிரியர் **இரா.கோதண்டராமன்,**
செம்மொழித் தமிழாய்வு
மத்திய நிறுவனம், சென்னை.
கைபேசி: 9443151044

**சென்ற இதழின் தொடர்ச்சி**

2.5 **வீழ்** என்னும் வினையடியாகத் தோன்றி நிகழும் **வீழ்த்து**. **வீழ்ந்து** ஆகிய வினையமைப்புகள் பின்வருமாறு பெறப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 6 (1) | (1) *வீழின்ற்உ > வீழிற்று | | (இன்ற்உ > இற்று) |
| | (2) வீழிற்று > வீழித்து | | (இற்று > இத்து) |
| | (3) வீழித்து > வீழ்த்து | | (இ > φ / - த்த்) |

**வீழ்த்து** பழந்தமிழில் இறந்தகாலப் பகுதியாகவும் நிகழ்கிறது. **மாவீழ்த்துப் பறித்த** (நற்.13.3) என்பதில் **வீழ்த்து** என்பது இறந்தகால வினையெச்சமாகும். இதில் நிகழும் முதல் தகரம் னகரத்தின் திரிபாகும். **வீழ்த்து** என்பது வினையடியாகவும் நிகழும் நிலை காணப்படுகிறது. வினையடியானது ***செயுந்த்உ** வாய்பாட்டு அடிநிலை அமைப்பினின்றும் பின்வருமாறு தோன்றியதாகும். ***வீழுந்த்உ, வீழுத்து, வீழ்த்து.**

| | | |
|---|---|---|
| (2) | (1) *வீழின்ற்உ > வீழின்று | (இன்ற்உ > இன்று) |
| | (2) வீழின்று > வீழிந்து | (இன்று > இந்து) |
| | (3) வீழிந்து > வீழ்ந்து | (இ > φ / - ந்த்) |

இந்த ஆய்வினின்றும் **-ந்து**, **-த்து** என்பவற்றில் தகரக் கால இடைநிலையின் முன் நிகழும் நகரமும் தகரமும் -இன்- என்பதில் உள்ள னகரத்தின் திரிபுகள் என்பது புலனாகின்றது.

2.6 **ஆள்** என்னும் வினையடியாகத் தோன்றி நிகழும் **ஆண்டு, ஆளிது, ஆளித்து** ஆகிய வினைகளின் தோற்றம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 7 (1) | (1) ஆளின்ற்உ > ஆளின்று | (இன்ற்உ > இன்று) |
| | (2) ஆளின்று > ஆளிந்து | (இன்று > இந்து) |
| | (3) ஆளிந்து > ஆள்ந்து | (இ > φ /-ந்த்) |
| | (4) ஆள்ந்து > ஆள்ண்டு | (ந்த் > ண்ட் / ள்-) |

(5) ஆள்ண்டு > ஆண்ண்டு (ள் > ண் / - ண்ட்)

(6) ஆண்ண்டு > ஆண்டு (ண் > / ண்-ட்)

(2) (1) *ஆளின்ற்உ > ஆளின்று (இன்ற்உ > இ;ன்று)

(2) ஆளின்று > ஆளிந்து (இன்று > இந்து)

(3) ஆளிந்து > ஆளிது (கன்) (ந் > $\phi$ / த்)

ஆளிது + அனு > ஆளிதனு 'ஆண்டான்'

(3) (1) *ஆளின்ற்உ > ஆளிற்று (இன்ற்உ > இற்று)

(2) ஆளிற்று > ஆளித்து (கன்) (இற்று > இத்து)

(3) ஆளித்து > ஆளித்உ (கன்) (த்த் > த்)

ஆளித்து / ஆளித்உ 'ஆண்டது'

2.7 **கொல்** என்னும் வினையடியாகத் தோன்றி நிகழும் **கொன்று, கொந்து, கொலித்து** ஆகியவற்றின் தோற்றம் வருமாறு

(8) (1) (1) *கொலின்ற்உ > கொலின்று (இன்ற்உ > இன்று)

(2) கொலின்று > கொலிந்து (இன்று > இந்து)

(3) கொலிந்து > கொல்ந்து (இ > $\phi$ / -ந்த்)

(4) கொல்ந்து > கொல்ன்று (ந்த் > ன்ற் / ல்-)

(5) கொல்ன்று > கொன்ன்று (ல் > ன் / -ன்ற்)

(6) கொன்ன்று > கொன்று (தமிழ்) (ன் > $\phi$ / ன்-ற்)

(7) கொன்று > கொந்து (கன்) (ன்ற் > ந்த்)

கொந்து + அனு > கொந்தனு (கன்) 'கொன்றான்'

(2) (1) *கொலின்ற்உ > கொலிற்று (இன்ற்உ > இற்று)

(2) கொலிற்று > கொலித்து (கன்) (இற்று > இத்து)

(3) கொலித்து > கொலித்உ (கன்) (த்த் > த்)

கொலித்து / கொலித்உ கொன்றது

வினைப்பகுதி **கொல்லு** என்று அமைந்தால் கன்னட இறந்தகால ஒன்றன்பால் வினை **கொல்லித்து / கொல்லித்உ** என அமையும்.

2.8 **சுடு, நடு, தொடு, பெறு** முதலிய ஒரு பிரிவு வினைகள் முன்பே குறிப்பிட்டதுபோல் ***-இன்ற்உ** என்பதன்முன் முறையே **சுட், நட், தொட், பெற்** என்ற சார்ந்துருபுகளாக அமையும். கருதுக.

9 (1) *பெற்-இன்ற்உ > பெறிற்று (இன்ற்உ > இற்று)

(2) பெறிற்று > பெறித்து (இற்று > இத்து)

(3) பெறித்து > பெற்த்து (இ > ϕ/-த்;த்)

(4) பெற்த்து > பெற்ற்று (த்த் > ற்ற் / ற்-)

(5) பெற்ற்று > பெற்று (தமிழ்) (ற் >ϕ /ற்ற்)

(6) பெற்று > பெத்து (கன்) (ற்ற் > த்த்)

பெத்து + அளு > பெத்தளு 'பெற்றாள்'

2.9 **தின்று, திந்து, தினித்து** ஆகியவை **தின்** என்பதன் வினையடியாகப் பின்வருமாறு பெறப்படும்.

10 (1) (1) *தினின்ற்உ > தினின்று (இன்ற்உ > இன்று)

(2) தினின்று > தினிந்து (இன்று > இந்து)

(3) தினிந்து > தின்ந்து (இ > ϕ/- ந்த்)

(4) தின்ந்து > தின்ன்று (ந்த் > ன்ற் /ன்-)

(5) தின்ன்று > தின்று (தமிழ்) (ன் > ϕ/ ன் - ற்)

(6) தின்று > திந்து (கன்) (ன்ற் > ந்த்)

திந்து + அனு > திந்தனு (கன்) 'தின்றான்'

(2) (1) *தினின்ற்உ > தினிற்று (இன்ற்உ > இற்று)

(2) தினிற்று > தினித்து (கன்) (இற்று > இத்து)

(3) தினித்து > தினித்உ (கன்) (த்த் > த்)

வினையடி தின்னு என்று இருந்தால் **தின்னித்து / தின்னித்உ** என்று கன்னட ஒன்றன்பால் வினைமுற்றுக்கள் நிகழும்.

2.10 **ஓடு** என்ற வினையடியாக அமையும் **ஓடிற்று, ஓடிது, ஓடித்து** ஆகிய வினைகள் பின்வருமாறு பெறப்படும்:

11 (1) (1) *ஓடின்ற்உ > ஓடிற்று (தமிழ்) (இன்ற்உ > இற்று)

(2) ஓடிற்று > ஓடித்து (பார்ப்பன மற்றும் கன்னட ஒன்றன்பால் வினை) (இற்று > இத்து)

(2) (1) *ஓடின்ற்உ > ஓடின்று (இன்ற்உ > இன்று)

(2) ஓடின்று > ஓடிந்து (இன்று > இந்து)

(3) ஓடிந்து > ஓடிது (கன்) (ந் > ϕ/-த்)

ஓடிது+அனு > ஓடிதனு 'ஓடினான்'

2.11 **நட** (தமிழ்), **நடெ** (கன்) இந்த வினையடிகள் ***நடய்** என மீட்டுருவாக்கம் செய்யப்படும். **-அய்** என்பது தமிழில் அகரமாகவும் கன்னடத்தில் எகரமாகவும் திரியும். **நட/நடெ** ஆகியவற்றின் அடியாகத் தோன்றி நிகழும் **நடந்து** (தமிழ்), **நடெது** (கன்), **நடெயித்து** (கன்) ஆகிய வினைகள் பின்வருமாறு பெறப்படும்.

12 (1) (1) *நடயின்ற்உ > நடயின்று (இன்ற்உ > இன்று)

(2) நடயின்று > நடயிந்து (இன்று > இந்து)

(3) நடயிந்து > நடய்ந்து (இ > ϕ/-ந்த்)

(4) நடய்ந்து > நடந்து (தமிழ்) (ய் > ϕ /-ந்த்)

(2) (1) *நடயின்ற்உ > நடெயின்ற்உ (அ > எ/-ய்)

(2) நடெயின்ற்உ > நடெயின்று (இன்ற்உ > இன்று)

(3) நடெயின்று, நடெயிந்து (இன்று > இந்து)

(4) நடெயிந்து > நடெய்ந்து (இ > ϕ/-ந்த்)

(5) நடெய்ந்து > நடெந்து (ய் > ϕ/-ந்த்)

(6) நடெந்து > நடெது (கன்) (ந் > ϕ/-த்)

நடெது+அனு > நடெதனு 'நடந்தான்'

(3) (1) *நடயின்ற்உ > நடெயின்ற்உ (அ>எ/-ய்)

(2) நடெயின்ற்உ > நடெயிற்று (இன்ற்உ>இற்று)

(3) நடெயிற்று > நடெயித்து (கன்) (இற்று > இத்து)

நடெயித்து 'நடந்தது'

2.12 மறய் (=மறை) என்ற வினையின் அடியாக **மறய்ந்து** (மறைந்து), **மறய்த்து** (=மறைத்து), **மறஞ்சு, மறச்சு** ஆகிய வினைகள் தோன்றி நிகழும். இவை பின்வருமாறு பெறப்படும்.

13 (1) (1) *மறயின்ற்உ > மறயின்று (இன்ற்உ > இன்று)

(2) மறயின்று > மறயிந்து (இன்று > இந்து)

(3) மறயிந்து > மறய்ந்து (=மறைந்து)(தமிழ்) (இ > ϕ/-ந்த்)

(4) மறய்ந்து > மறய்ஞ்சு (ந்த் > ஞ்ச் /ய்-)

(5) மறய்ஞ்சு > மறஞ்சு (பேச்சு வழக்கு) (ய் > ϕ/- ஞ்ச்)

(2) (1) *மறயின்ற்உ > மறயிற்று (இன்ற்உ > இற்று)

(2) மறயிற்று > மறயித்து (இற்று > இத்து)

(3) மறயித்து > மறய்த்து (=மறைத்து) (இ > ϕ/ய்-த்த்)

(4) மறய்த்து > மறய்ச்சு (த்த் > ச்ச் / ய்-)

(5) மறய்ச்சு > மறச்சு (பேச்சுவழக்கு) (ய் > ϕ/-ச்ச்)

**மறய்** (=மறை) என்பது செயப்படுபொருள் குன்றியவினையாக இனங்காணப்படுகையில் **மறய்ந்து** (=மறைந்து) / **மறஞ்சு** என்ற செய்து வாய்பாட்டு வினையும் செயப்படுபொருள் குன்றாத வினையாக இனங் காணப்படுகையில் **மறய்த்து** (=மறைத்து) / **மறச்சு** என்ற செய்து வாய்பாட்டு வினையும் தோன்றி நிகழும்.

2.13 **கொய்** என்ற வினையடியாகத் தோன்றும் **கொய்து** என்ற தமிழ், கன்னட வினையும், **கொயித்து** என்ற கன்னட ஒன்றன்பால் வினையும் பின்வருமாறு பெறப்படும்.

14 (1) (1) *கொயின்ற்உ > கொயின்று (இன்ற்உ > இன்று)

(2) கொயின்று > கொயிந்து (இன்று > இந்து)

(3) கொயிந்து > கொய்ந்து (இ > ϕ/-ந்த்)

(4) கொய்ந்து > கொய்து (தமிழ், கன்) (ந் > ϕ/ய்-த்)

கொய்து+அனு > கொய்தனு (கன்) 'கொய்தான்'

(2) (1) *கொயின்ற்உ > கொயிற்று (இன்ற்உ > இற்று)

(2) கொயிற்று > கொயித்து (கன்) (இற்று > இத்து)

(3) கொயித்து > கொயித்உ (கன்) (த்த் > த்)

(4) கொயித்உ > கொய்த்உ (கன்) (இ > ϕ/-த்)

கொயித்து / கொயித்உ 'கொய்தது'

2.14 இகரவீற்று வினையடிகள் -இய் ஈற்றனவாக இந்த ஆய்வில் கொள்ளப்படுகிறது. அறிய என்பதன் வினையடி ***அறிய்** என மீட்டுருவாக்கப்படும். இந்த வினையடியாக அமையும் **அறிந்து, அறித்உ/அறிது, அறியித்து** ஆகியவை பின்வருமாறு பெறப்படும்.

15 (1) (1) *அறியின்ற்உ > அறியின்று (இன்ற்உ > இன்று)

(2) அறியின்று > அறியிந்து (இன்று > இந்து)

(3) அறியிந்து > அறிய்ந்து (இ > ϕ > /ய்-ந்த்)

(4) அறிய்ந்து > அறிந்து (தமிழ்) (ய் > ϕ /-ந்த்)

(2) (1) *அறியின்ற்உ >அறியிற்று /அறியின்று

(இன்ற்உ > இற்று/இன்று)

(2) அறியிற்று /அறியின்று >அறியித்து /அறியிந்து

(இற்று>இத்து/இந்து)

(3) அறியித்து / அறியிந்து > அறியித்து/அறிய்ந்து

(இ >ϕ /-த்த், -ந்த்)

(4) அறிய்த்து/அறிய்ந்து > அறித்து / அறிந்து (ய்>ϕ /-த்த், -ந்த்)

(5) அறிந்து > அறிது (கன்) (ந் > ϕ /-த்)

அறிது+அனு > அறிதனு (கன்) 'அறிந்தான்'

(6) அறித்து > அறித்உ (கன்) (த்த் >த்)

அறித்உ+அனு>அறித்அனு (கன்) 'அறிந்தான்'

(3) (1) *அறியின்ற்உ > அறியிற்று (இன்ற்உ > இற்று)

(2) அறியிற்று > அறியித்து (கன்) (இற்று > இத்து))

(3) அறியித்து > அறியித்உ (கன்) (த்த்>த்)

அறியித்து / அறியித்உ 'அறிந்தது'

2.15 கெடு என்பது தனிக்குறிலடுத்து நிகழும் உகரவீற்று வினையடியாகும். இந்த வினை செயப்படு பொருள் குன்றிய வினையாயின் **-இன்ற்உ** என்பதன்முன் **கெட்** என்ற சார்ந்துருபாக நிகழும். செயப்படுபொருள் குன்றா வினையாயின் **-இன்ற்உ** என்பது **-ன்ற்உ** என்ற சார்ந்துருபாக நிகழும். **கெடு** என்பதன் அடியாகத் தோன்றும் **கெட்டு, கெடுத்து** ஆகிய செய்து வாய்பாட்டு வினைகள் பின்வருமாறு பெறப்படும்.

16 (1) *கெட்-இன்ற்உ > கெடிற்று (இன்ற்உ > இற்று)

(2) கெடிற்று > கெடித்து (இற்று > இத்து)

(3) கெடித்து > கெட்த்து (இ > ϕ/-த்த்)

(4) கெட்த்து > கெட்ட்டு (த்த் > ட்ட் /ட்-)

(5) கெட்ட்டு > கெட்டு (தமிழ்) (ட்>ϕ/ட்-ட்)

17 (1) *கெடுன்றஉ > கெடுற்று (-ன்றஉ > ற்று)

(2) கெடுற்று > கெடுத்து (தமிழ்) (-ற்று > -த்து)

2.16 **நூல்** என்னும் வினையடியாகத் தோன்றித் திகழும் **நூற்று** என்பது பின்வருமாறு ஆராயப்படும்.

18 (1) *நூலின்றஉ > நூலிற்று (இன்றஉ > இற்று)

(2) நூலிற்று > நூலித்து (இற்று > இத்து)

(3) நூலித்து > நூல்த்து (இ > ϕ/-த்த்)

(4) நூல்த்து > நூல்ற்று (த்த > ற்ற் / ல்-)

(5) நூல்ற்று > நூற்ற்று (ல் > ற் / -ற்ற்)

(6) நூற்ற்று > நூற்று (ற் > ϕ/ற்-ற்)

நூற்று+ஆன் ›நூற்றான்

2.17 **சா, சாவு** என்னும் வினையடி கன்னடத்தில் **சாயு** என நிகழ்கிறது. இந்த வினை ***சாய்** என மீட்டுருவாக்கப்படும். ***சாய்** என்பது தமிழில் **செய்** எனவும் கன்னடத்தில் **சய்** எனவும் சார்ந்துருபுகளைக் கொண்டுள்ளது. **செத்து** (தமிழ்), **சத்து** (கன்) ஆகிய செய்து வாய்பாட்டு வினைகள் இவற்றினின்றும் பின்வருமாறு வருவிக்கப்படும்.

19 (1) (1) *சயின்றஉ > சயிற்று (இன்றஉ > இற்று)

(2) சயிற்று > சயித்து (இற்று > இத்து)

(3) சயித்து > சய்த்து (இ >ϕ/ய்-த்து)

(4) சய்த்து > சத்து (கன்) (ய் > ϕ/ - த்து)

சத்து + அனு > சத்தனு 'செத்தான்'

(2) (1) *செயின்றஉ > செயிற்று (இன்றஉ > இற்று)

(2) செயிற்று > செயித்து (இற்று > இத்து)

(3) செயித்து > செய்த்து (இ> ϕ/ ய் - த்து)

(4) செய்த்து > செத்து (தமிழ்) (ய் > ϕ/ -த்து)

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# தமிழ்ப் பண்பாட்டு நோக்கில் கட்டைக்கூத்து

**க.சேகர்**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.
கைபேசி: 7904667901.

**முன்னுரை:**

*"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு*
*முன்தோன்றிய மூத்தகுடி"*

என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை. தமிழர்கள் வாழ்வோடு இசை இரண்டறக் கலந்தது. ஆயகலைகள் அறுபத்து நான்கனுள் ஒன்றாகக் கூத்துக்கலை இருந்து வருகிறது. இதிலிருந்துதான் ஆடற்கலைகள் தோன்றியிருக்க வேண்டும். கலை என்னும் பெயர்ச்சொல் 'கல்' என்னும் வேர்ச்சொல்லிருந்து தோன்றியது எனலாம். 'கல்லுதல்' என்றால் தோண்டுதல் என்பதாகும். அதாவது, மனதிற்குள் மறைந்து கிடக்கும் ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் போன்ற நுணுக்கங்களை வெளிக்கொணர்வது கலை எனப்படும். கலை என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் (Art) என்பது திறன் என்று பொருள்படும். கலையினை மனத்திறத்தின் வெளிப்பாடு என்னும் பொருளில் சிலம்பு குறிக்கின்றது. ஆடற்கலையைக் கூத்துக்கலை என்றும் நாட்டியக்கலை என்றும் கூறுவர். மனதால் நினைப்பதை வாயினால் பாடுவதைப்போல உறுப்புகளின் குறிப்பினால் கருத்துகளை விளக்குவது நாட்டியம் எனப்படும். ஆடற்கலையில் முகபாவம் இன்றியமையாதது. இன்பம், துன்பம், கோபம் முதலியவற்றை வெளிப்படுத்துவது ஆடற்கலையின் சிறப்பாகும். இவ்வுணர்வு மெய்யின்கண்பட்டுத் தோன்றுவதால் மெய்ப்பாடு எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இதனை,

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென*
*அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"* (தொல். (மெய் 3)

இம் மெய்ப்பாடுகளின் அடிப்படையில் நாடகம் அமைந்துள்ளது. பண்டையோர் ஆடிய ஆட்டங்களில் வள்ளிக்கூத்து ஒன்று. நாட்டுக்கு வளமும், வெற்றியும் கொணர்ந்த வள்ளியின் பெருமைகளைப்

பாடியாடுவது வள்ளிக்கூத்து ஆகும். இதனை 'வாடா வள்ளி' என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

மக்களிடம் கூத்து என்னும் நாடகமே, முதலில் தோற்றம் பெற்றிருக்கலாம். அதன் பின்பே இயல் இசை தோற்றம் பெற்றிருக்கலாம். நாடகம் இறுதியில் வைக்கப்பட்டதால் பின்னர் தோன்றியிருக்கலாம் எனக் கருதத்தக்கது. தமிழ்க்காப்பியத்தில் முதலாவதாகத் தோன்றியதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் கூத்துக்கலைகள் அறியப்படுகின்றன. கூத்துக்கலையின் காட்சிகள் பல்லவர்களின் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. சங்கத்தமிழ்ப் பாக்கள் மூலம் நாடகம் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

கூத்துக்கலையில் கூத்துக்கலைஞர்களின் பங்களிப்பு, கலை மக்களுக்காகவே என்பதை உணர்த்துகிறதாக அமைகின்றது. நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான கூத்துக்கலை தெருக்களிலும், களத்து மேடுகளிலும், மக்கள் கூடும் இடங்களிலும், கோயில் வளாகங்களிலும் நடத்தப்பட்ட கூத்து வடிவமே கட்டைக்கூத்து என்றழைக்கப்படுகின்றது. தங்களது சொந்தக் குரலில் பாடல் மூலமாகக் கதையினைச் சுவைபட வழங்குவர். இசை நயமிக்க பாடல்கள் தாளக்கட்டு வகையில் இடம் பெறுகின்றன. கூத்தில் இருபொருள்படும் படியாகவும், முகம் சுளிக்கும் வகையில் வசனங்கள் (உரையாடல்கள்) இல்லாதவாறு பார்த்துக் கொள்வார்கள். கட்டியங்காரனின் (கதைசொல்லி) பேச்சும் நடிப்பும் கதைக்களத்திற்கு உதவியாக இருக்கும். காட்சி மாற்றம் அடையவும் இவரே முக்கிய கருத்தாவாக இருக்கிறார்.

**கட்டைக்கூத்து தோற்றமும் வளர்ச்சியும்**

"**நாடகமே உலகம்! - நாமனைவரும் அதில் நடிகர்கள்**". தமிழனின் தொன்மையான கலைவடிவம் நாடகம் ஆகும். பிறர் செய்வதைப் போலவே, கதைக்கு உரியவகையில் நடித்துக்காட்டும் நிகழ்வினைப் போலச் செய்தல் என்பர். உயிரற்ற பொருள்களை வைத்து விளையாடிய விளையாட்டு, படிப்படியாக வளர்ச்சியடைந்து உயிருள்ள மனிதர்களையே வேடம் புனையச்செய்து ஆடிப்பாடி நடிக்கவைத்தது. அவையே கூத்துக்கலையாக உருப்பெற்றது. சிலப்பதிகாரம் கூத்துக் கலையினை இருவகையாக அறியச் செய்கிறது. அவை,

1. **வேத்தியல் கூத்து**
2. **பொதுவியல் கூத்து** என்பனவாகும்.

வேத்தியல் கூத்து என்பது அரசர்களுக்கெனத் தனியாகக் கூத்தர்களால் நிகழ்த்தப்படுவது ஆகும். இவர்களுக்குப் பொன்னும் பொருளும் அரசனால் வழங்கப்படும். அரசனின் பெருமைகள், சிறப்புகள், நாட்டுவளம், கொடைத்திறன், வீரம், ஆளுமை பற்றிப் பாடுவார்கள். மற்றொரு வகையான பொதுவியல் கூத்தானது பொதுமக்கள் பார்வைக்காக, பொது மக்கள் கூடும் இடத்தில் நிகழ்த்தப்படுவது ஆகும். நாடகமானது இயல்பாகத் தோன்றக்கூடிய கலையாகும். நடிப்புக்கலை அனைவரிடத்தும் இயல்பாக, இயற்கையாக அமைந்து கிடக்கும் கலையாகும். நாடகம் மக்களைச் சென்றடைய வேண்டும். அதற்கு மொழி இன்றியமையாதது ஆகும். உலக நாடக வரலாற்றில் தமிழ்மொழியில் வழங்கப்படும் கூத்துக்கலையே உயர்ந்தது என்றும், மற்றமொழிகளில் வரும் நாடகப் பழக்க வழக்கங்கள் வித்தியாசமானது என்றும் கூறலாம். தமிழ்ப்பண்பாடு மட்டுமே காலம் பல கடந்தாலும் தன்னுடைய பண்பிலிருந்து மாறாத்தன்மையுடன் இருந்து வருகிறது. இதுவே கூத்துக்கலைக்கு வழிகாட்டியாக உள்ளது. கூத்துக்கலையானது பின்வரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது.

“***கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்***
***உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்***
***நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே***” (தொல்.மெய்.27)

என, நாடகக்கலையானது கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிக்கவல்லது. கண்ணும், செவியும் நாடகக் கலையைச் சுவைப்பதற்கான முக்கிய உறுப்புகள் என்பதைத் தொல்காப்பியர் விளக்குகிறார். கூத்துக்கலையானது ஒன்பது வகையான சுவையினைப் பெற்று இருக்குமாறு அமைவதாகும். **வீரம், அச்சம், இழிவு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரச்சுவை** ஆகியவை நாடகத்தின் ஒன்பான் கூறுகளாக அமையப்பெற்றுள்ளன.

விடியலில் தொடங்கி மாலைவரை வயலில் உழுது நாற்றுப்பிடுங்கி, நடவு நட்டு, களைபறித்து, கண்ணும் கருத்துமாய்க் கண்காணித்து, அறுவடை செய்து, நெல்மணிகளை வீட்டுக்குக் கொண்டுவந்து உழைப்பை முதலாக்கும் விவசாயிகளின் மனச்சோர்வைப் போக்கும் வகையில் திருவிழாக்களிலும், பிறவிழாக்களிலும் முக்கிய இடத்தைக் கூத்துக்கள் வகித்தன. அவற்றில் கேளிக்கை தொடர்பான நாடகங்களை

எவ்வித ஒப்பனையுமின்றித் தங்களுக்குத் தெரிந்த கதைகளால் நடித்துக் காண்பித்து மகிழ்ந்தனர். பிறரைப் போல நடை, உடை, பாவனை போன்றவற்றைச் செய்துக் காண்பித்தனர். இது **போலச் செய்தல்** என்றும் அழைக்கப்படும்.

பத்துப்பாட்டு பொருநர் ஆற்றுப்படையில் மற்றவர்களைப் போலவே வேடமிட்டு அரசர்கள், வள்ளல்கள் முன் ஆடிப்பாடி பரிசில்பெற்றுச் சென்ற சான்றுகள் பலவுள்ளன. இவர்கள் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என மூவகையுள் அடங்குவர். கரிகால் பெருவளத்தானைப் பாடிப் பரிசில் பெற்ற பொருநன் பரிசில் பெறாத பொருநனைக் கரிகாற் பெருவளத்தானிடம் செல்லுங்கள் என ஆற்றுப்படுத்துவது போன்ற நிகழ்வுகள் சங்ககாலம் தொட்டே என்றென்றும் கூத்துக்கலையில் இருந்து வருகிறது என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும்.

**மேடையமைப்பு**

கட்டைக்கூத்து மேடைகள் பொதுவாகத் திறந்தவெளிகளிலேயே அமைக்கப்பெற்றிருந்தன. நடிப்பதற்கேற்ற தனிமேடையமைப்புகள் அமைக்கப்படுவதில்லை. தென்னை ஓலைகளினால் வேயப்பட்ட தனிக்கொட்டகைகள் அமைக்கப்பட்டு இருக்கும். மேடைகளில் காட்சிப் பின்னணிகளோ, திரைகளோ இடம் பெற்றிருக்காது. தற்காலத்தில் பாரதக்கூத்து நிகழும் இடங்களில் (திரௌபதி அம்மன் கோயில் வளாகத்தில்) தனிக் கல்காரை மேடைகள் அமைக்கப்படும்; அதற்கான தனி இடங்களும் ஒதுக்கப்பட்டு உள்ளன. ஒதுக்கப்படாத இடங்களில் நிகழ்வு நடத்தும்போது சரிசெய்து கொள்கிறார்கள். தீவட்டிகள் எனப்படும் எண்ணெய்த் தீப்பந்தங்களாலான விளக்குகளே ஒளியமைப்புக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. பின்பு காலமாற்றத்தின் பயனாக மண்ணெண்ணெய் அழுத்த விளக்குகள் (பெட்ரோமாக்ஸ் விளக்குகள்) பயன்பட்டுவந்தன. மின்சார விளக்குகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. கூத்து தொடங்குவதற்கு முன் கூத்தர்கள் வேடங்கட்டிக் கொண்டிருக்கையில் இசைக்கலைஞர்கள் (மிருதங்கம், முகவீணை, ஆர்மோனியம், தாளம், சலங்கை போன்ற கருவிகளை வாசித்தபடியும், இசையைக்கூட்டி சரி செய்தும் கொள்வர். இந்நிகழ்வைக் **களரி கட்டுதல்** என்று கூறுவர். இவ்வாறு இவர்கள் அமர்ந்திருக்கும் இடம் **விசுப்பலகை** என்று அழைக்கப்படும். வேடங்கட்டாத சில கூத்தர்கள்

பின்பாட்டுப் பாடுவதற்குத் தயாராக இருப்பர். வேடங்கட்டிக்கொண்டு இருப்பவர்களும் இருந்த இடத்திலிருந்தே பின்பாட்டுப் பாடுவதும் உண்டு. பாடல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எனக் கூத்துத் தொடங்கும் நேரத்தைப் பொருத்து ஒன்றிரண்டு பாடல்கள் கூடுதலாகவும் பாடுவதற்கு வாய்ப்புண்டு.

**ஆடுகளம் அமைப்பு**

*"கூத்தாட்டவைக் குழாஅத் தற்றே பெருஞ்செல்வம்*
*போக்கும் அதுவிளிந் தற்று"* *(திருக்குறள்..332)*

கூத்தர்களால் ஆடப்படும் இடங்கள் ஆடுகளம், கூத்தாட்டவை, பாடுகளம் எனப்பட்டன. விழாக்களில் மகிழ்ச்சிக் களிப்பில் ஆடிப்பாடியதால் இயற்கையான திறந்தவெளிப் பரப்புகளே களமாக அமைந்தன. எனவே, அது களம் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும்.

*"புய்த்தெளிக் கரும்பின் விடுகளைத் தாமரை*
*பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்*
*ஆடுகளம் எடுக்கும் அகநாட்டையே"* *(புறம் 23)*

இவ்வாறு ஆடுகளங்கள் இருந்ததைப் புறநானூறு விளக்குகிறது. பொதுவாக ஆடுகளங்கள் மண் புல் நிறைந்த தரைப்பகுதிகளாகவே இருக்கும். ஏனெனில் கூத்தர்கள் ஆடும்போது காலில் உறைகாலணி இல்லாமல்தான் ஆடுவார்கள். அவர்களின் சுழற்சியான ஆட்டங்களும், தாளக்கட்டுக்கு ஏற்றாற்போல் ஆடும் ஆட்டங்களும் காண்போர்க்கு வியப்பைத் தரும் வகையில் இருக்கும். ஒளி அமைப்புகளுக்கு அக்காலத்தினில் தீவட்டிகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. தற்போது மின் விளக்குகள், சோடியம் விளக்குகள் அதிகம் வந்துள்ளன. மேலும், அந்தந்தப் பகுதியின் வசதிக்கேற்ப விளக்குகள் அமைக்கப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. ஒலி அமைப்புகள் என்பது காணமுடியாது. இசைக்கலைஞர்களுக்கு உரிய இடமாக நீண்ட மேடைகள் அமைக்கப்பட்டு இருக்கும். ஆர்மோனியம் வாசிப்பவருக்குத் தனியாக மேடையும், நாற்காலியும் வழங்கப்பட்டு இருக்கும். இவ்விடம் விசுப்பலகை என்று அழைக்கப்படுகிறது. பின்பாட்டுப் பாடுபவர்கள் விசுப்பலகையை ஒட்டியபடியே இருந்து பாடல்களைப் பாடுவார்கள். மண் தரை புழுதி பறக்கும் என்பதால் அடிக்கடி தண்ணீர் தெளிக்கும் வழக்கத்தைக் கட்டியங்காரன் பார்த்துக்கொள்வான். சிறு சிறு கற்கள்

இருந்தாலும் நீக்கி விடுவர். சின்னஞ்சிறு செயல்களாக இருந்தாலும் கட்டிங்காரனின் பங்கும் பணிகளும் முக்கியமானதாகும். மேடையமைப்பில் அவரது பங்கு போற்றுதலுக்குரியது.

**தமிழ்ப்பண்பாட்டு நோக்கில் கட்டைக்கூத்து**

*"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்"*

என்கிறது கலித்தொகை. தமிழ்ப்பண்பாட்டு நோக்கில் கட்டைக்கூத்து தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை அதன் வடிவம் மாறாது பின்பற்றப்படுகிறது. நமது கலை கலாச்சாரம் சீரழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மக்கள் மனமகிழ்வு கொள்ளும் வகையில் கதையினை இலக்கியச்சுவையுடன் இருபொருள் (ஆபாசமான) சொற்கள் இல்லாது இன்றளவும் வழங்கப்பட்டு வருகிறது. மேடைநாடகங்களின் பண்புகள் தற்போதைய சூழலில் மாறிக்கொண்டே வருகிறது. ஒரு கதையினை எடுத்துக்கொண்டு நவீனம் என்ற பெயரில் யாருக்கும் புரியாமல் நிகழ்த்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருபொருள் தரும் வசனங்களால் மேடைநாடகக் கூத்துக்கலை இன்று தடம் மாறிக்கொண்டு வருகின்றது. இவர்களால் தமிழ்ப்பண்பாட்டு நிலையை நிலைநிறுத்துவதற்கு முடியாமல் போகிறது. கூத்து நிகழ்த்தும் இடங்களில் கதையினை மாற்றி மாற்றி நடத்துவதும் தற்காலத் திரைப்படப் பாடல்களைப் பாடியும் மக்களை மகிழ்விக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாடகக் கலையை வேறுவிதமான பாதைக்கு அழைத்துச் செல்கின்றனர். இதனால் நாடகத்தின் தன்மை நாளுக்கு நாள் மாறியவண்ணம் உள்ளன. கட்டைக்கூத்து நிகழ்த்தும் நேரங்களில் தமிழர்களின் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பவே பின்பற்றப்பட்டு வருகின்றது. சகோதர பாசம், தாய்ப்பாசம், பிள்ளைகளை வளர்த்த விதம், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காத நிலை, குடும்பத்தின் எந்தச்சூழலிலும் விருந்தோம்பல் பண்பு, சடங்கு முறைகள், திருமண முறைகள் ஆகியவை கூத்துக்கலைகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. பகுத்து உண்ணும் வழக்கமும் உறவு முறையைப் போற்றும் விதமும் இதிகாச புராணக் கதைகளில் காணமுடிகிறது. இதனைப் பண்பாட்டுச் சுவையுடன் கட்டைக்கூத்தினில் வழங்குவது போற்றுதலுக்குரியதாக அமைகின்றது.

**முடிவுரை**

**"மக்களால் மக்களுக்காக நடத்தப்பட்ட கலையே கூத்துக்கலை"** ஆகும். இக்கலையில் இறைவனின் மாண்பு, மன்னர்களின் தொடர்புகள், கருத்துக்கள், மக்களின் இயைபு பற்றிய செய்திகள் தமிழ்மணம் மாறாமல் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப்பண்பாட்டு நோக்கில் கட்டைக்கூத்தானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செல்வாக்குப் பெற்ற நடிப்புக்கலையாக - தெருக்கூத்துக் கலையாக விளங்கியது என அறியலாம். இந்த நடத்துகலையின் வடிவத்தை முந்தைய நடத்துகலைக்கும் தற்கால நாடகத்திற்கும் இடைப்பட்டது என்பார்கள். முத்தமிழின் சாறு பிழிந்து கூத்துக்கலை மெருகேற்றப்படுகிறது. தமிழ்க் கலையும் பண்பாட்டுச் சூழலை மேம்படுத்தும் வகையில் மக்களிடத்தில் சங்கமமாகின்றது. கதை, பாடல்கள், நடிப்புத்திறன் ஆகியவற்றை இசைக்கருவிகளுடன் பாடி, தாளத்திற்கேற்ற உடல் அசைவாக ஆடுதல் ஆகியவை தமிழனின் பெருமையை அலங்கரிப்பதாக அமைகிறது. மிருதங்கம், டோலக், ஜால்ரா, முகவீணை, ஆர்மோனியம் ஆகிய இசைக் கருவிகள் கூத்துக்கலைக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைகின்றன. மகாபாரதம், இராமாயணக் கதைகள் மற்றும் பிறக்கதைகள் கொண்டு நமது தமிழ்ப்பண்பாட்டை மீறாதவகையில் செயலாக்கம் பெற்றவண்ணம் கட்டைக் கூத்துக்கலை நடைபெற்று வருகிறது.

## தமிழ்செய்தபேறு

*காவலராய் வாழ்ந்தார் பலருண்டு காசினியில்*
*பாவலராய் வாழ்ந்தாரைப் பார்த்ததிலை - நாவலராய்ப்*
*பார்புகழ வாழ்ந்துயர்ந்தார் பாண்டித் துரைத்தேவர்*
*சீர்தமிழ் செய்ததவப் பேறு.*

திருமிகு தி.கி.சுந்தரமூர்த்தி

## ஜூலை திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

கு.அழகிரிசாமி
(ஜூலை.5)

மயிலை சிவமுத்து
(ஜூலை.6)

இரா.இராகவையங்கார்
(ஜூலை.11)

சுவாமி விபுலானந்தர்
(ஜூலை.19)

வேதநாயகம் பிள்ளை
(ஜூலை.21)

சுப்பிரமணிய சிவா
(ஜூலை.23)

மு.கோவிந்தசாமி
(ஜூலை.23)


பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி

## நான்காம் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- ♦ இளம் இலக்கியம்
- ♦ இளங்கலை
- ♦ முதுகலை
- ♦ இளம்நிலை ஆய்வாளர்
- ♦ முதுநிலை ஆய்வாளர்
- ♦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1